කාර්ය සාධන වාර්තාව
நிதிச் செயலாற்றுகைக் கூற்று
PERFORMANCE REPORT

# 2022

## කොම්ප්ට්‍රෝලර් ජනරාල් කාර්යාලය
## கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம்
## COMPTROLLER GENERAL'S OFFICE

මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
Ministry of Finance, Economic Stabilization and National Policies

# நிதிச் செயலாற்றுகைக் கூற்று

# 2022

## கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

# உள்ளடக்கம்

| அத்தியாயங்கள் | | பக்க இல. |
|---|---|---|


| | | |
|---|---|---|
| **01:** | **நிறுவன விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு** | |
| 1.1 | அறிமுகம் | 1 - 1 |
| 1.2 | தூர நோக்கு மற்றும் செயற்பணி | 2 - 2 |
| 1.3 | நோக்கங்கள், பிரதான பணிகள் மற்றும் பிரதான செயற்பாடுகள் | 2 - 4 |
| 1.4 | அமைப்புரீதியானகட்டமைப்பு | 4 - 4 |
| **02:** | **முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்** | |
| 2.1 | அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களுக்காக இற்றைப்படுத்தப்பட்ட விவரமான மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றைப் பேணிவருதல | 5 - 9 |
| 2.2 | அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவம் பற்றிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 9 - 12 |
| 2.3 | நிதி அல்லாத சொத்துக்களின் விற்பனை வருமானம | 13 -13 |
| 2.4 | சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்கள | 13 - 14 |
| **03:** | **2022 டிசம்பர் முடிடைந்த வருடத்திற்கான முழுமொத்த நிதி 31ச் செயலாற்றுகை** | |
| 3.1 | நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று | 15 - 15 |
| 3.2 | நிதி நிலைமை பற்றிய கூற்று | 16 - 16 |
| 3.3 | காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று | 17 - 17 |
| 3.4 | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 18 - 18 |
| 3.5 | வருமானத்தை திரட்டுவது பற்றிய செயலாற்றுகை | 18 - 18 |
| 3.6 | ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை | 19 - 19 |
| 3.7 | நி குறிப்பு .பி.208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்மாவட்டச் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு / செயலகம் | 19 - 19 |
| 3.8 | நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை | 19 - 19 |
| 3.9 | கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 19 - 19 |
| **04:** | **செயலாற்றுகைச் சுட்டிகள** | |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (நடவடிக்கைத் திட்டத்தின் அடிப்படையில்) | 20 - 20 |

| அத்தியாயங்கள் | | பக்க இல. |
|---|---|---|


**05: நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**

| | | |
|---|---|---|
| 5.1 | அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய அபிவிருத்தி இலக்குகள | 21 - 23 |
| 5.2 | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக | 23 - 23 |

**06: மனிதவள விபரம்**

| | | |
|---|---|---|
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 24 - 24 |
| 6.2 | பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக | 24 - 24 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 24 - 25 |

**07: இணக்கப்பாட்டு அறிக்கை** 26 - 32

**அட்டவணைகள்**

| | | |
|---|---|---|
| 2.1 | அரசாங்கத்திற்கு சொந்தமான ஒட்டுமொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை | 6 - 6 |
| 2.2 | அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தொகுதியின் வயதுப் பகுப்பாய்வு - 2021.12.31 அன்றுள்ளவாறு | 6 - 6 |
| 2.3 | அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தொகுதி 2021.12.31 அன்றுள்ளவாறு | 7 - 7 |
| 2.4 | வாடகைக்கு விடப்பட்டுள்ள இடங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் வாடகைக்கு/ குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பற்றிய தகவல்களின் சுருக்கம் - 2021.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | 8 - 8 |
| 2.5 | அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய சுருக்கம் - 2021.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு | 9 - 9 |
| 2.6 | இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களின் பழுதுபார்ப்பு, பயன்பாடு அல்லது அகற்றலின் முன்னேற்றம் | 10 - 10 |
| 2.7. | அடையாளங் காணப்பட்ட சிதைவுப் பொருட்களின் அளவு மற்றும் விற்பனை வருமானம் பற்றிய சுருக்கம் - 2021.12.15 இல் உள்ளவாறு | 12 - 12 |
| 2.8 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை வருமானம் (ரூபா மில்.) | 13 - 13 |

# 2022 ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகம்

## செலவினத் தலைப்பு இல. 333

## அத்தியாயம் 01 – நிறுவன விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்:

அரசாங்கத்தின் நிதி சாரா ஆதனங்களை முகாமை செய்வதனை நோக்காகக் கொண்டு 2017 வரவு செலவுத்திட்ட உரையின் 368 ஆவது முன்மொழிவில் குறிப்பிடப்பட்டவாறு கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் 2017 மார்ச் மாதம் 07 ஆந் திகதி நிதி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகம் அரசாங்கத்தின் ஆதனங்கள், பொருட்கள் மற்றும் செலவு முகாமைத்துவம் என்பவற்றை கண்காணிப்பதனை பிரதான பொறுப்பாகக் கொண்டுள்ளது. இந்தவகையில், நிதி சாரா ஆதனங்களுக்கான மத்திய பதிவு ஒன்றினைப் பேண வேண்டியது அவசியமென்பதுடன், நிதி சாரா ஆதன முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்தும் அதேவேளை, பயன்பாடற்ற வளங்களை இனம்காண்பதுடன் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி வேலைச் சட்டகத்தினை வலுப்படுத்துவதற்கு குறித்த ஆதனங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதும் அவசியமாகும்.

அரசாங்கத்தின் நிதி சாரா ஆதன முகாமைத்துவமானது முன்னுரிமை செயற்பாடொன்றாக மாறியுள்ளது. ஏனெனில், ஆதனங்களின் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுக்கான வினைத்திறனான முறையொன்றினைப் பின்பற்றுதல், ஆதனங்களை உரியமுறையில் பாதுகாத்தல் மற்றும் வினைத்திறனான பயன்பாடு என்பவற்றைக் கண்காணிப்பதனை நோக்காகக் கொண்ட நிறுவனமொன்று இல்லாத போது அத்தகைய ஆதனங்களின் தரம் மற்றும் உற்பத்தித்திறன்மிக்க பயன்பாடு அழிவடைந்து போகும். அரசாங்க நிறுவனங்கள் (மத்திய அரசு முகாமைகள், பொது நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள்) தமது பாதுகாப்பின் கீழ் ஆதனங்களின் பதிவுகளைப் பேணுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அவ்வாறான செயற்பாடுகள் இதுவரை முறையாக இடம்பெறவில்லை என்பதுடன் மையப்படுத்தப்பட்ட பதிவுகளைப் பேணி வைப்பதற்கான நடைமுறைகளும் காணப்படுவதில்லை. இதனை மையப்படுத்திய நிறுவனமொன்று இல்லாமையினால் நிதி சாரா ஆதனங்கள் காலத்திற்குக் காலம் விலைமதிப்பீடு செய்யப்படாத அதேவேளை, அவற்றின் உண்மையான பெறுமதி உரிய முறையில் பிரதிபலிக்கப்படுவதில்லை.

மேலும், மூலதன சொத்துக்களின் திறமையான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக, 2018 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மூலதன சொத்துக்களின் விற்பனை தொடர்பாக வருமான கணக்கீட்டு அலுவலரின் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## 1.2 தூர நோக்கு மற்றும் செயற்பணி

**(அ) தூர நோக்கு:**

அரச துறை நிதிசாரா ஆதன முகாமைத்துவத்துக்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் நிறுவனம்.

**(ஆ) செயற்பணி :**

நம்பகரமான நிதி சாரா ஆதன முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தி சட்டகத்தினை வலுப்படுத்துவதற்கு நிதி சாரா ஆதனங்களின் வினைத்திறனான பயன்பாட்டை உறுதிப்படுத்தும் அதேவேளை விரிவான மத்திய நிதி சாரா ஆதனப் பதிவொன்றினைப் பேணுதல்.

## 1.3 நோக்கங்கள், பிரதான பணிகள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

**(அ) நோக்கங்கள் :**

(i) அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்கள் முகாமை (மத்திய அரசு முகாமைகள், பொது நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள்):

அ. அனைத்து நிதி அல்லாத சொத்துக்களையும் சொத்து மேலாண்மை அமைப்பையும் பதிவு செய்ய புதுப்பிக்கப்பட்ட விரிவான மைய தரவுத்தளத்தை (ஆன்லைன் அமைப்புடன்) நிறுவுதல்.

ஆ. நிதியல்லாத சொத்துக்களை திறம்பட மற்றும் திறமையாக பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் வளர்ச்சி கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.

இ. நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பை பதிவு செய்வதன் துல்லியத்தை உறுதி செய்தல்.

ஈ. நிதி அல்லாத சொத்துக்களின் நிர்வாகத்தில் தலைமை மற்றும் பாதுகாவலர் பாத்திரத்தை வகித்தல்.

(ii) அரசு நிறுவனங்களின் நிதி சாராத சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை வசூலித்தல்.

**(ஆ) பிரதான பணிகள்:**

(i) அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்கள் முகாமைத்துவம்

அ. அனைத்து நிதியல்லாத சொத்துகள் தகவல்களையும் (மதிப்பீட்டுடன் சொத்துகளைப் பதிவுசெய்ய இயலும்) பதிவுசெய்து அறிக்கையிடுவதற்காக புதுப்பிக்கப்பட்ட விரிவான மையத் தரவுத் தளத்தை (ஆன்லைன் தரவுத்தளத்துடன்) பராமரித்தல் மற்றும் ஒரு சொத்து மேலாண்மை அமைப்பு.

ஆ. கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்: நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் செலவு முகாமைத்துவம் ஆகியவற்றின் உகந்த பயன்பாட்டிற்காக தவறான நிர்வாகம், பொது சொத்துக்களை வீணாக்குதல் மற்றும் பாழாக்குதலை தடுத்தல்.

(ii) அரசு நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களை விற்பனை செய்வதற்கான வருமானக் கணக்கீட்டு அதிகாரியாக செயல்படுதல்.

**(இ) பிரதான செயற்பாடுகள்:**

அ. அரசாங்கத்தின் அனைத்து நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் சொத்து முகாமைத்துவ முறைமை ஆகியவற்றின் புதுப்பிக்கப்பட்ட விரிவான மைய தரவுத்தளத்தை (ஆன்லைன் தரவுத்தளத்துடன்) உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்.

ஆ. அமைச்சரவை குறிப்புகளை சமர்ப்பித்தல் மற்றும் கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துவதற்கான சுற்றறிக்கைகளை வழங்குதல்.

இ. அரச சொத்துக்களை கையகப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

ஈ. அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் இந்த சொத்துக்களின் உற்பத்தி பயன்பாட்டிற்கான சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல்.

உ. அரசாங்கம் முடிவெடுப்பதற்கான நிர்வாகத் தகவலை வழங்குதல்.

ஊ. அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமைச் சிக்கல்களைத் தீர்த்தல்.

எ. அரசு நிறுவனங்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நிதி அல்லாத சொத்துக்களை ஒதுக்கீடு செய்தல்.

ஏ. அரசு நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளால் வாகனங்களை வாங்குவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

உ. முதலீடுகள் மற்றும் நிதி சமநிலைக்கு உதவ, செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துகளை அடையாளம் காணுதல் மற்றும் தொடர்புடைய தகவல் / வழங்குதல் விதிமுறைகளை சமர்ப்பித்தல்.

எ. அரச நிறுவனங்களின் நிதி அல்லாத சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை சேகரித்தல் மற்றும் அறிக்கை செய்தல்.

## 1.4 அமைப்புரீதியான கட்டமைப்பு




அ.உ. - அபிவிருத்தி உத்தியோகத்தர்

மு.சே.உ.- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

அ.ப.உ. - அலுவலகப் பணி உதவியாளர்

# அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்திக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் நிதி சாராத சொத்துக்களின் நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக, நிதி சாராத சொத்துக்களுக்கான ஒரு மத்திய பதிவேட்டைப் பராமரிப்பது மற்றும் செயலற்ற வளங்களை அடையாளம் காணும் அதேவேளையில் அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவக் கொள்கைகளை வகுத்துச் செயற்படுத்துவது அவசியம்.

## 2.1. அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களுக்காக இற்றைப்படுத்தப்பட்ட விவரமான மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றைப் பேணிவருதல்

முதலாவது கட்டமாக சர்வதேச நாணய நிதியத்தின் 2014 ஆம் ஆண்டின் அரசிறைப் புள்ளிவிபரவியல் கையேட்டிலுள்ள சொத்துக் குறியீடு வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை, அதாவது வாகனங்கள், கட்டடங்கள், காணிகள், நிர்மாணம், பொறித் தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பற்றிய அடிப்படை தகவல்களை திரட்டுவதற்காக ஆலோசனை வழங்கும் பொருட்டு 2017 ஜூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

### (அ) விவரமான மையப்படுத்தப்பட்ட நிகழ்நிலை (Online) தரவுத் தொகுதியொன்றையும் முகாமைத்துவ முறைமையொன்றையும் தாபித்தல்:

அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை முகாமை செய்வதற்காக விவரமான மையப்படுத்தப்பட்ட நிகழ்நிலை (Online) தரவுத் தொகுதியொன்றையும் முகாமைத்துவ முறைமையொன்றையும் தாபிப்பதற்காக ஒருங்கிணைந்த திறைசேரி செயற்பாட்டு தகவல் தொகுதியின் (ITMIS) மூலம் தாபித்துத் தருமாறு ITMIS கருத்துட்டத்திடம் கோரிக்கை விடுத்து கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது சவால் மிக்கதாக இருக்கின்றபடியினால் வாகன முகாமைத்தும் சம்பந்தமாக நிகழ்நிலை தரவுத் தொகுதியொன்றை தாபிப்பதற்காக தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்துடன் ஆரம்ப பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

### (ஆ) மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதி - மோட்டார் வாகனம்:

01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைவாக, 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் அறிக்கையிடப்பட்டவாறு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அரச தொழில்முயற்சிகளுக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் 2018 ஏப்ரல் 24 ஆம் திகதியில் அறிக்கையிடப்பட்டவாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி அட்டவணை 2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மோட்டார் வாகனங்கள் பற்றிய தரவுத் தொகுதியை முதலில் தயாரித்து அந்த தகவல்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2019 டிசம்பர் 31 மற்றும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிகளில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் பற்றிய தரவுத் தொகுதி அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 64,518 ஆக காணப்பட்ட ஓட்டக்கூடிய நிலைமையில் காணப்படுகின்ற மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 76,661 வரையும், 2021

ஆம் ஆண்டின் இறுதியில் 77,678 வரையும் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் 9,303 ஆக காணப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான ஓட்ட முடியாத நிலையில் காணப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 5,533 வரை குறைவடைந்துள்ள அதேவேளையில், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 6,569 வரை அதிகரித்துள்ளது.

அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் 73,821 ஆக காணப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான/ பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 82,194 வரையும், 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 84,247 வரையும் அதிகரித்துள்ளது.

**அட்டவணை 2.1: அரசாங்கத்திற்கு சொந்தமான ஒட்டுமொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை**

| | 2017 அ | 2019.12.31 இல் உள்ளவாறு | 2021.12.31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| **ஓட்டக்கூடிய நிலைமையில் காணப்படுகின்ற மோட்டார் வாகனங்கள்** | ***64,518*** | ***76,661*** | ***77,678*** |
| அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுத் தெழில்முயற்சிகள் | 50,160 | 60,326 | 61.248 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 14,358 | 16,335 | 16,429 |
| **ஓட்ட முடியாத நிலையில் காணப்பட்ட மோட்டார் வாகனங்கள்** | ***9,303*** | ***5,533*** | ***6,569*** |
| அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுத் தெழில்முயற்சிகள் | 7,723 | 3,839 | 4.889 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 1,580 | 1,694 | 1,680 |
| முழு மொத்தம் | ***73,821*** | ***82,194*** | ***84,247*** |

அ - மத்திய அரசாங்கம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் - 2017.12.31 அன்று அறிக்கையிடப்பட்டுள்ளவாறு
மாகாண சபைகள் - 2018.04.24 அன்று அறிக்கையிடப்பட்டுள்ளவாறு

2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அரசாங்க மோட்டார் வாகனங்களை நிறுவனரீதியாக வேறுபடுத்துதல் மற்றும் வயதுப் பகுப்பாய்வு பற்றிய தகவல் முறையே அட்டவணை 2.2 மற்றும் அட்டவணை 2.3 ஆகியவற்றில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2: அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தொகுதியை நிறுவன ரீதியாக ஒதுக்குதல் 2021.12.31 அன்றுள்ளவாறு**

| | அரசாங்க நிறுவனம் | பயன்படுத்த முடியுமான வாகனங்கள் | பயன்படுத்த முடியாத வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **மத்திய அரசாங்க நிறுவனங்கள்** | | **61,248** | **4,888** | **66,136** |
| அ) | அமைச்சுக்கள் | 3,697 | 88 | **3,785** |
| ஆ) | விசேட செலவின அலகுகள் | 1,209 | 18 | **1,227** |
| இ) | திணைக்களங்கள் | 18,691 | 1,251 | **19,941** |
| ஈ) | வெளிநாட்டு தூதுவராலயங்கள் | 158 | 7 | **165** |
| உ) | மாவட்டச் செயலகங்கள் | 1,420 | 154 | **1,574** |
| ஊ) | பல்கலைக்கழகங்கள் மற்றும் உரிய நிறுவனங்கள் | 1,054 | 53 | **1,107** |
| எ) | முப்படையினர் மற்றும் பொலிஸ் | 19,693 | 1,526 | **21,219** |
| **அரச தொழில்முயற்சிகள்** | | **15,327** | **1,792** | **17,119** |
| **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்** | | **16,410** | **1,680** | **18,090** |
| அ) | மத்திய மாகாண சபை | 1,830 | 189 | **2,019** |
| ஆ) | கிழக்கு மாகாண சபை | 1,735 | 446 | **2,181** |
| இ) | வட மத்திய மாகாண சபை | 892 | 45 | **932** |
| ஈ) | வடமேல் மாகாண சபை | 1,631 | 53 | **1,684** |
| உ) | வடக்கு மாகாண சபை | 2,046 | 380 | **2,426** |
| ஊ) | சப்ரகமுவ மாகாண சபை | 1,284 | 81 | **1,365** |
| எ) | தென் மாகாண சபை | 1,711 | 234 | **1,945** |
| ஏ) | ஊவா மாகாண சபை | 1,084 | 49 | **1,133** |
| ஒ) | மேல் மாகாண சபை | 4,269 | 203 | **4,472** |
| **மொத்தம்** | | **77,678** | **6,569** | **84,247** |

| அட்டவணை 2.3: அரசாங்கத்தின் மோட்டார் வாகனத் தொகுதியின் வயதுப் பகுப்பாய்வு - 2021.12.31 அன்றுள்ளவாறு | | | | | |
|---|---|---|---|---|---|
| வாகனத்தின் வகை | 0-5 வருடங்கள் | 6-10 வருடங்கள் | 10 வருடத்திற்கு மேற்பட்டது | பதிவு வருடம் குறிப்பிடப் படாதது | மொத்தம் |
| எஸ்யுவி | 107 | 565 | 3995 | 135 | 4802 |
| மோட்டார் கார் | 361 | 1994 | 5250 | 340 | 7945 |
| டபள் கெப் | 427 | 2470 | 7333 | 558 | 10785 |
| வேன் | 188 | 644 | 2208 | 217 | 3257 |
| சிங்ள்கெப்/ இரட்டைநோக்க மோட்டார் வாகனம் | 282 | 988 | 4466 | 255 | 5991 |
| பேரூந்து | 384 | 1459 | 2933 | 3554 | 8330 |
| க்ரூவ் கெப் | 03 | 25 | 46 | 5 | 79 |
| மோட்டார் லொரி | 514 | 1387 | 3665 | 206 | 5772 |
| ட்ரக்டர் | 109 | 864 | 4261 | 479 | 4261 |
| ஏனைய வாகனம் | 6832 | 7381 | 16360 | 2399 | 33022 |
| **மொத்தம்** | **9,257** | **17,777** | **47,074** | **10,139** | **84,247** |

### (இ) மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதி - கட்டடங்கள்

2017 ஜுன் 28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை, 2020 சனவரி 03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 01/2017(1) ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2021 பிப்ரவரி 18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 01/2021 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை ஆகியவற்றின் மூலம் அரசாங்கத்தின் கட்டடங்கள் பற்றிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களினால் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளபடியினால் 2022 சனவரி 03 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 01/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் கட்டடங்கள் பற்றிய தகவல்களை பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக, அரசாங்க நிறுவனங்களினால் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வாடகைக்கு விடப்பட்டுள்ள இடங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் வாடகைக்கு/ குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பற்றிய தகவல்களின் சுருக்கம் அட்டவணை 2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக, 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் அளவு 57.1 மில்லியன் சதுர மீற்றராவும் வாடகைக்கு/ குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கட்டடங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் அளவு 2.9 மில்லியன் சதுர மீற்றராவும் காணப்படுகின்ற அதேவேளையில் அதற்காக செலவாகின்ற வருடாந்த செலவினம் ரூபா 11.6 பில்லியன் ஆகும். அதனிடையே பயன்படுத்தப்படாத நிலத்தின் அளவு சுமார் 0.8 மில்லியன் சதுர மீற்றர் ஆகும். மேலும் அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் உள்ள நிலத்தின் அனவில் 1.7 மில்லியன் சதுர மீற்றர் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் அதன் மூலம் அரசாங்க நிறுவனங்களிலிருந்து ரூபா 6.2

பில்லியயையும் தனியார் நிறுவனங்களிலிருந்து ரூபா 3.1 பில்லியனையும் வருடாந்த வருமானமாக சம்பாதிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அந்த தகவல்களை உள்ளடக்கி கட்டடங்கள் பற்றிய மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியை தயாரித்து அந்த தகவல்கள் 2022 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதியன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 01/2021 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஆலோசனைக்கு அமைவாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத அல்லது சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத அரசாங்க நிறுவனங்களிடமிருந்து தொடர்புடைய தகவல்களை சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கி 2022 நவம்பர் 22 ஆம் திகதியன்று 12/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.4: வாடகைக்கு விடப்பட்டுள்ள இடங்கள் உட்பட அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களினால் வாடகைக்கு/ குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பற்றிய தகவல்களின் சுருக்கம் - 2021.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு**

| அரசாங்க நிறுவனம் | பயன்படுத்தப்படுகின்ற நிலத்தின் அளவு (சதுர மீற்றர்) | | | பயன்படுத்தப் படாத நிலத்தின் அளவு (சதுர மீற்றர்) | வருடாந்த வாடகை/ குத்தகை செலவு (ரூபா மில்.) | குத்தகைக்கு விடப்பட்டுள்ள இடங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | சொந்தமானது | வாடகைக்கு/ குத்தகைக்கு | மொத்தம் | | | நிலத்தின் அளவு (சதுர மீற்றர்) | வருடாந்த வருமானம் (ரூபா மில்.) |
| அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுத் தெழில்முயற்சிகள் | 46,041,744 | 2,680,256 | 48,722,000 | 596,855 | 11,439.6 | 970,225 | 8,564.2 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 11,137,528 | 200,502 | 11,338,030 | 188,345 | 148.4 | 721,656 | 749.6 |
| மொத்தம் | 57,179,272 | 2,880,758 | 60,060,030 | 785,200 | 11,588.0 | 1,691,881 | 9,313.8 |

குறிப்பு: கராஜ், உத்தியோகபூர்வ இல்லம், சுற்றுலா பங்களா, ஓய்வு விடுதிகள் மற்றும் ஏனைய அவ்வாறான பதிவிடம் அல்லாத கட்டிடங்களின் தகவல் இந்த தகவல்களில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும், 2023 ஜனவரி 18 ஆம் திகதியன்று 01/2023 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையை வெளியிட்டு அரசாங்கத்தின் கட்டடங்கள் பற்றிய தகவல்களை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இற்றைப்படுத்தி சமர்ப்பிக்குமாறு சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### (ஈ) மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதி - காணி:

2017 ஜுன் 28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் அரசாங்கத்தின் காணிகள் பற்றிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களினால் அந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், அரசாங்கத்தின் காணி பற்றிய தரவு தொகுதியை பூர்த்தி செய்வதற்காக தகவல்களை திரட்டுவதற்கு 2022 ஜனவரி மாதம் 07 ஆம் திகதியன்று 03/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம், ஒரு சில அரசாங்க நிறுவனங்களினால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில், 740 அரசாங்க நிறுவனங்களினால் அந்த தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 395 அரசாங்க நிறுவனங்களினால் காணி பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை

உள்ளடக்கி காணி பற்றிய தரவு தொகுதியை தயாரித்து அந்த தகவல்கள் 2022 டிசம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய தகவல்களின் சுருக்கம் அட்டவணை 2.5 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தக் காணிகளின் அளவு 1.49 மில்லியன் ஹெக்டேயர்களாகக் காணப்படுகின்ற அதேவேளையில் அதில் 1.12 மில்லியன் ஹெக்டேயர்கள் காடுகளினால் சூழப்பட்ட காணிகள் ஆகும். அறிக்கையிடப்பட்டுள்ள காணியின் அளவில் பயன்படுத்தப்படுகின்ற காணி 1.47 மில்லியன் ஹெக்டேயர்களும் பயன்படுத்தப்படாத காணி 13,702 ஹெக்டேயர்களும் உள்ளடங்கியுள்ளன. 2,537 ஹெக்டேயர் காணியைப் பயன்படுத்துவது பற்றி அரசாங்க நிறுவனங்களினால் இதுவரை அறிக்கையிடப்படவில்லை.

**அட்டவணை 2.5: அரசாங்க நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகள் பற்றிய சுருக்கம் - 2021.12.31 இல் உள்ளவாறு**

| அரசாங்க நிறுவனம்/ காணிப் பயன்பாடு | | காணிகளின் அளவு (ஹெக்டேயர்) |
|---|---|---|
| **அரசாங்க நிறுவனத்திற்கு சொந்தமான அல்லது வாடகைக்கு/ குத்தகைக்குப் பெறப்பட்டுள்ள மொத்தக் காணிகளின் அளவு** | | **1,490,950** |
| | அதில் வனப் பகுதி | 1,125,700 |
| **i** | **பயன்படுத்தப்படுகின்ற** | **1,474,711** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 1,404,656 |
| | பொதுத் தெழில்முயற்சிகள் | 49,563 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 20,493 |
| **ii** | **பயன்படுத்தப்படாத** | **13,702** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 8,826 |
| | பொதுத் தெழில்முயற்சிகள் | 4,468 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 407 |
| **iii** | **பயன்பாடு பற்றிக் குறிப்பிடப்படாத** | **2,537** |
| | அரசாங்க நிறுவனங்கள் | 1,147 |
| | பொதுத் தெழில்முயற்சிகள் | 1,097 |
| | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 294 |

மேலும், 2023 சனவரி 18 ஆம் திகதியன்று 02/2023 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையை வெளியிட்டு அரசாங்கத்தின் காணிகள் பற்றிய தகவல்களை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இற்றைப்படுத்தி சமர்ப்பிக்குமாறு சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 2.2. அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்து முகாமைத்துவம் பற்றிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

**(அ) அரசாங்கத்தின் சொத்துக்கள் அழிந்து போவதற்கு இடமளித்தல் மற்றும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழத்தல் ஆகியவற்றை தவிர்ப்பதற்கு அரசாங்கத்தின் வாகனங்களை உரிய விதத்தில் பயன்படுத்துதல் மற்றும் தாமதமின்றி அகற்றுதல்**

2018 மார்ச் 19 ஆம் திகதியன்று 01/2018 ஆம் இலக்கத்தைக் கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையை வெளியிட்டு ஓட்டக்கூடிய நிலைமையில் இல்லாத வாகனங்களை அகற்றுவது

சம்பந்தமாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த ஆலோசனைக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதன் முன்னேற்றம் திருப்திகரமானதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம், 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியன்று அறிக்கையிடப்பட்டவாறு அவ்வாறான வாகனங்கள் பற்றிய தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து, அவ்வாறான வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுத்தல் அல்லது அகற்றுதலை 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொண்டு, அந்த தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பதற்கு 2021 சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்தின் சகல நிறுவனத் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கி 2020 அக்டோபர் 02 ஆம் திகதியன்று 05/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின் மூலம் மீண்டும் மீண்டும் ஆலோசனை வழங்கியுள்ள போதிலும், ஒருசில அரசாங்க நிறுவனங்கள் அந்த ஆலோசனைகளுக்கு இணங்குவதற்கு உரிய கவனத்தைச் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதனால் 2021 டிசம்பர் 15 ஆம் திகதியில் உள்ளவாறு ஓட்டக்கூடிய நிலைமையில் இல்லாத வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுத்தல் அல்லது அகற்றுதல் என்பவற்றின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதற்கு அமைவாக எஞ்சிய அவ்வாறான வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கி, இந்த சொத்துக்கள் அழிவதற்கு இடமளித்தல் மற்றும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இழத்தல் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டு உரிய விதத்தில் பராமரித்தல் மற்றும் கவனக்குறைவுடன் பயன்படுத்தாது வாகனத்தை உரிய விதத்தில் பயன்படுத்துவதற்கு தொடர்புடைய சுற்றறிக்கையின் ஆலோசனைகளை பின்பற்றி தேவைக்கு ஏற்றவாறு தாமதமின்றி வாகனங்களை அகற்றுவது சகல அரசாங்க நிறுவனங்களினதும் கட்டாய பணியாகும் என்பதனை வலியுறுத்தி 2022 சனவரி 25 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6: இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களின் பழுதுபார்ப்பு, பயன்பாடு அல்லது அகற்றலின் முன்னேற்றம்

| அரசாங்க நிறுவனம் | 2020 ஆகஸ்ட் 31 அன்று அறிக்கையிடப்பட்டவாறு | | | | | 2023 மே 15 திருத்தல் முன்னேற்றம் | | | | | | 2020 ஆகஸ்ட் 31 அன்று அறிக்கையிடப்பட்ட வாறு | | | | | 2023 மே 15 திருத்தல் முன்னேற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திருத்தப்படும் வாகனங்கள் | | | | | திருத்தப்பட்ட வாகனங்கள் | | | | | திருத்தல் செலவு (ரூபா மில்.) | திருத்தப்படும் வாகனங்கள் | | | | | திருத்தப்பட்ட வாகனங்கள் | | | | | விற்பனை வருமானம் (ரூ. மில்.) |
| | எஸ்யுவி (ஜீப்) | கார் | டபள் கெப் | வேன் | ஏனைய | எஸ்யுவி (ஜீப்) | கார் | டபள் கெப் | வேன் | ஏனைய | | எஸ்யுவி (ஜீப்) | கார் | டபள் கெப் | வேன் | ஏனைய | எஸ்யுவி (ஜீப்) | கார் | டபள் கெப் | வேன் | ஏனைய | |
| அரசாங்க நிறுவனங்கள்/ அரச தொழில்முயற்சிகள் | 485 | 183 | 517 | 148 | 2,253 | 353 | 160 | 433 | 113 | 1336 | 915 | 380 | 475 | 346 | 142 | 2,893 | 95 | 283 | 138 | 71 | 1083 | 566 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் | 24 | 21 | 66 | 29 | 347 | 18 | 21 | 50 | 18 | 179 | 80 | 59 | 45 | 125 | 41 | 924 | 23 | 22 | 35 | 15 | 230 | 68 |
| மொத்தம் | 509 | 204 | 583 | 177 | 2,600 | 371 | 181 | 483 | 131 | 1515 | 995 | 439 | 520 | 471 | 183 | 3,817 | 118 | 305 | 173 | 86 | 1313 | 634 |

வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுத்தல் அல்லது அகற்றுதல் என்பவற்றின் 2023 மே 15 இல் உள்ளவாறான முன்னேற்றம் அட்டவணை 2.6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு பழுதுபார்ப்பதற்கு 5.430 வாகனங்களும்

அகற்றுவதற்கு 4.073 வாகனங்களும் காணப்பட்ட அதேவேளையில் 2023 மே 15 இல் உள்ளவாறு ரூபா 912 மில்லியன் செலவிட்டு 2,241 வாகனங்களைப் பழுதுபார்த்து ஓடக்கூடிய நிலைக்கு கொண்டுவந்துள்ள அதேவேளையில் 1,742 வாகனங்களை அகற்றி ரூபா 634 மில்லியன் வருமானத்தை சம்பாதித்துள்ளது. மேலும், உரிய விதத்தில் வாகனங்களின் அகற்றல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் அரசாங்க நிறுவனங்களினால் அகற்றப்படுகின்ற வாகனங்களின் வருமானம் 20.06.02.01 எனும் வருமானக் குறியீட்டு இலக்கத்திற்கு உரிய விதத்தில் வரவு வைக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 08/2022 ஆம் இலக்கத்தைக் கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையும், வாகனங்களின் அகற்றலின் மூலம் கிடைக்க வேண்டிய வருமானம் இழப்பதை தவிர்க்கும் நோக்கத்துடன், கழிவுப்பொருட்களாக அகற்றுவதற்கு உரிய வாகனங்களின் பதிவு உரிமையை இரத்துச் செய்வதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு 2022 செப்டம்பர் 16 ஆம் திகதிய 11/2022 ஆம் இலக்கத்தை கொண்ட சொத்து முகாமைத்து சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**(ஆ) அரச வாகனங்கள் கொள்வனவை நிர்வகித்தல்:**

2019 ஆம் ஆண்டின் நடுப் பகுதியிலிருந்து, அரச நிறுவனங்களுக்கான பயன்பாட்டு வாகனங்கள் தவிர ஏனைய மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்வதை நிறுத்திவைப்பதற்கு 2019 செப்டம்பர் 24 அன்று 05/2019 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய அத்தியவசியப் பணிகளுக்காக தேவையான பயன்பாட்டு வாகனங்களையும் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் பயன்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தவிர அரசாங்கத்திற்கு மேலதிக செலவுச் சுமையின்றி அரசாங்கத்தின் வாகனத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு இருக்கின்ற வாகனங்களைப் பயன்படுத்தி முகாமைசெய்யப்பட்டது. அரசாங்கத்தில் காணப்படுகின்ற பயன்பாட்டு வாகனங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாடு மற்றும் தேவையை மதிப்பிட்டு, பயன்பாட்டு வாகன கொள்முதலுக்காக 2022 வருடத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்ட 137 கோரிக்கைகளில், 76 வாகனங்களை கொள்வனவுசெய்வதற்கு கம்ப்றோலர் ஜெனரல் அலுவலகம் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்திற்கு சிபாரிசுசெய்துள்ளது.

**(இ) அரசுக்கு சொந்தமான வாகனங்களின் பதிவு உரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்தல்:**

சில அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் கணிசமான எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு அத்தகைய வாகனங்களின் சட்டப்பூர்வ உரிமை இல்லை என்றும் சட்டப்பூர்வ உடைமை மற்றொரு அரசாங்க நிறுவனத்திற்குச் சொந்தமானது என்றும் கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம் அடையாளம் கண்டுள்ளது. எனவே, மோட்டார் வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக, 2017 டிசம்பர் 21 ஆந் திகதி 02/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையும் 2018 அக்டோபர் 10 அன்று 03/2018 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம், 2023 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் 284 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமைப் பிரச்சினைகளைத் கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகம் தீர்த்துள்ள அதேவேளையில் இதற்காக 2022 ஆம் ஆண்டில் 54 வாகனங்கள் சம்பந்தமாக் காணப்பட்ட பதிவு உரிமைப் பிரச்சினைகளைத் கொம்ப்றோலர் ஜெனரல் அலுவலகம் தீர்த்துள்ளமையும் உள்ளடங்கும்.

**(ஈ) அரசாங்க நிறுவனங்களில் நீண்ட காலமாக குவித்து வைக்கப்பட்டுள்ள கழிவு பொருட்களை அகற்றுதல்**

அரசாங்க நிறுவனங்களில் நீண்ட காலமாக குவித்து வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை அகற்றும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்தி, நிதி ஒழுங்குவிதியை அடிப்படையாகக் கொண்டு 2022 செப்டம்பர் 09 ஆம் திகதிய 10/2022 ஆம் இலக்கத்தைக் கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையை வெளியிட்டு 2022 செப்டம்பர் 15 ஆம் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றுவது பற்றிய முன்னேற்றத்தை 2022 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிக்கையிடுமாறு சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மூலம் உருக்கு பொருட்களை வழங்கும் முறைமையைத் தயாரிப்பதற்காக 2005 ஜூலை மாதம் 13 மற்றும் 2013 அக்டோபர் மாதம் 17 ஆம் திகதிகளில் அமைச்சரவையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது. அது பற்றி கவனம் செலுத்தப்பட்டதுடன். 2022 செப்டம்பர் 15 ஆம் திகதியில் உள்ளவாறு அரசாங்க நிறுவனங்களில் குவிந்து காணப்படுகின்ற சிதைவுப் பொருட்களை துரிதமாக அகற்றும் பணிக்காக மாத்திரம் மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளவாறு அந்த உலோகக் கழிவு பொருட்களை அகற்றுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த செயல்முறைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கவில்லை. அதனால் அட்டவணை 2.7 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2022 டிசம்பர் 15 ஆம் திகதியளவில் காணப்பட்ட சிதைவுப் பொருட்களை அகற்றுவதன் முன்னேற்றத்தை சமர்ப்பித்து உலோகக் கழிவு பொருட்களை அகற்றும் பணியை கைத்தொழில் அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம், அமைச்சரவையின் அங்கீகாரத்தின்படி. கைத்தொழில் அமைச்சுடன் கூட்டிணைத்து உலோகக் கழிவு பொருட்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல அரசாங்க நிறுவனங்களுக்கும் அறிவுரை வழங்கி 2023 சனவரி 30 ஆம் திகதியன்று 03/2023 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 2022 டிசம்பர் 15 ஆம் திகதியன்று அறிக்கையிடப்பட்டவாறு சிதைவுப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 54.4 மில்லியன்களைச் சம்பாதித்துள்ளது.

**அட்டவணை 2.7: அடையாளங் காணப்பட்ட சிதைவுப் பொருட்களின் அளவு மற்றும் விற்பனை வருமானம் பற்றிய சுருக்கம் - 2021.12.15 இல் உள்ளவாறு**

| விபரம் | அடையாளங் காணப்பட்ட அளவு (மெ.தொன்) | அகற்றப்பட்ட அளவு (மெ.தொன்) | விற்பனை வருமானம் (ரூ.மில்.) |
|---|---|---|---|
| இரும்பு அல்லது உருக்கு | 2,832 | 116 | 12.1 |
| ஏனைய உலோகங்கள் | 299 | 40 | 11.7 |
| ஏனைய சிதைவுப் பொருட்கள் | - | - | 30.6 |

## 2.3 நிதி அல்லாத சொத்துக்களின் விற்பனை வருமானம்:

2018 மார்ச் 22 ஆந் திகதிய அரசிறைக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2015(xii) இன் படி, 2018 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில், நிதியல்லாத சொத்துகளின் விற்பனை வருமானத்தைக் கணக்கு வைப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தராக கொம்ப்றோலர் ஜெனரல் நியமிக்கப்பட்டுள்ளார்.

**அட்டவணை 2.8: மூலதனச் சொத்துக்களின் விற்பனை வருமானம் (ரூபா மில்.)**

| விபரம் | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|
| மூலதனச் சொத்து விற்பனை - வாகனங்கள் | 188.4 | 201.0 | 128.3 | 226.4 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை - ஏனைய | 2,685.7 | 56.0 | 60.1 | 357.8 |
| **மொத்தம்** | **2,874.1** | **257.0** | **188.4** | **584.2** |

இதற்காக 2022 ஆம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் 2021 ஆம் ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளுதல் பற்றி தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2021 ஜுன் மாதம் 03 ஆம் திகதிய 03/2021 ஆம் இலக்கத்தை கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டுக்குரிய வருமான மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் 2022 ஆம் ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளுதல் பற்றி தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 2022 மே மாதம் 23 ஆம் திகதிய 06/2022 ஆம் இலக்கத்தை கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் 30 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம், முதல் ஆறு மாத காலப்பகுதியில் திரட்டப்பட்ட நிலுவை வருமானம் மற்றும் தொடர்புடைய காலப் பகுதியில் கைவிடப்பட்ட வருமானம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக 2022 மே மாதம் 31 ஆம் திகதிய 07/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் 2022 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட நிலுவை வருமானம் மற்றும் தொடர்புடைய காலப்பகுதியில் கைவிடப்பட்ட வருமானம் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக 2022 டிசம்பர் 09 ஆம் திகதிய 13/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. மேலே 2.2 (அ) மற்றும் 2.2 (ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாகனங்கள் மற்றும் சிதைவுப் பொருட்களை அகற்றுவதனைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு அமைவாக, அட்டவணை 2.8 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2021 ஆம் ஆண்டில் ரூபா 188.4 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் நிதி அல்லாத சொத்துக்களின் விற்பனை வருமானம் ரூபா 584.2 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

## 2.4 சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்கள்

I. காணி, கட்டடங்கள், வாகனங்கள், நிர்மாணம், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திர சாதனங்கள் போன்ற அரசாங்கத்திற்கு சொந்தமான சகல நிதியல்லாத சொத்துக்களையும் முகாமை செய்வதற்காக விரிவான மத்திய நிகழ்நிலை (online) தரவுத் தொகுதியொன்றையும் முகாமைத்துவ முறைமையொன்றையும் தாபிப்பதற்கு கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

II. அரசாங்க நிறுவனங்களில் உள்ள நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதற்காக மாத்திரம் ஒருங்கிணைந்த திறைசேரி செயற்பாட்டு தகவல் தொகுதியின் (ITMIS) சொத்து மொடியூலாக சேர்க்கப்பட்டுள்ளபடியினால், அரசாங்க தொழில்முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக மத்திய நிகழ்நிலை சொத்து முகாமைத்துவ மென்பொருள் ஒன்றை நிர்மாணிப்பது அவசியமானதாகும். அதனால் அரசாங்க தொழில்முயற்சிகள் மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றுக்கு சொத்து முகாமைத்துவ மென்பொருள் ஒன்றை நிர்மாணிப்பதற்காக கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தினால் ITMIS குழு மற்றும் மென்பொருள் விருத்தி நிறுவனம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

III. அரசாங்கத்தின் சகல நிதி அல்லாத சொத்துக்களினதும் பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட்டில்லாமையின் காரணமாக அரசாங்க கணக்குகளை தயாரிக்கும் போது அந்த நிதி அல்லாத சொத்துக்களின் உண்மையான பெறுமதி குறிப்பிடப்படுவதில்லை என்பதும் இந்த நிலமையானது அரசாங்கத்தின் சொத்துக்கள் பற்றி பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பில் பிரச்சனைக்குரிய நிலையொன்றை தோற்றுவிக்கின்றது என்பதும் அவதானிக்கப்படுகின்றது. நிதி ஒழுங்குவிதிகளிலோ அல்லது திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளிலோ இந்த சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அமைவாக, மேலே (I) இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டலொன்றை தயாரித்து கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தினால் 04/2018 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை, 02/2019 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் 05/2021 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை என்பன வெளியிடப்பட்டுள்ளன. மேலும், நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்யும் செயல்முறை மற்றும் அந்தச் சொத்துக்களின் பெறுமதிகளை உள்ளடக்கிய முகாமைத்துவ தரவுத் தொகுதியொன்றைத் தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் துரிதப்படுத்துதல் என்பன அவசியமானதாகும்.

IV. அரசாங்க நிறுவனங்களினால் கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்தின் மூலம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு உரிய கால எல்லைக்குள் தொடர்புடைய தகவல்கள் சரியாக சமர்ப்பிக்காமை மற்றும் அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை முகாமை செய்வதற்காக மத்திய நிகழ்நிலை தரவுத் தொகுதியொன்றையும் தகவல் தொகுதியையும் தாபிப்பதில் காணப்படுகின்ற தடைகள் என்பன பிரதான சவால்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

K. A. Ramya Kanthi
Comptroller General
Comptroller General's Office
General Treasury
Colombo 01.

கொம்ப்ரோலர் ஜெனரல்

# அத்தியாயம் 03 - 2022 டிசம்பர் 31 முடிடைந்த வருடத்திற்கான முழுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| மதிப்பீடு 2022 | | குறிப்பு | உண்மை நிலை 2022 | உண்மை நிலை 2021 | |
|---|---|---|---|---|---|
| - | வருமானப் பெறுகைகள் | | 584,212,973 | 188,384,750 | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 584,212,973 | 188,384,750 | ஏசீஏ-1 |
| - | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | 584,212,973 | 188,384,750 | |
| - | வருமானமற்ற பெறுகைகள் | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 32,448,000 | 25,395,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 10,050 | 43,448 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 1,729,619 | 3,088,706 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | 34,187,669 | 28,527,154 | |
| - | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | 618,400,642 | 216,911,904 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 321,569 | 501,703 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | 618,079,073 | 216,410,201 | |
| | கழி : செலவினம் | | | | |
| - | மீண்டுவரும் செலவினம் | | | | |
| 27,[illegible],000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 24,577,673 | 19,523,614 | ஏசீஏ-2(ii) |
| 7,[illegible],000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 8,774,985 | 5,540,338 | ஏசீஏ-2(ii) |
| [illegible]50,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 236,808 | 282,740 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| 35,[illegible],000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | 33,589,466 | 25,346,692 | |
| | மூலதனம் செலவினம் | | | | |
| 100,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 99,506 | - | ஏசீஏ-2(ii) |
| - | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 38,546 | 112,881 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 130,000 | திறன் விருத்தி | 14 | 147,420 | 71,000 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | - | ஏசீஏ-2(ii) |
| 2[illegible],000 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | 285,472 | 183,881 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 10,050 | 43,448 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 1,838,662 | 2,241,892 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 1,848,712 | 2,285,340 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 35,723,650 | 27,815,913 | |
| [illegible] | டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ) | | 582,355,423 | 188,594,288 | |
| | பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி | | 582,355,423 | 188,594,288 | ஏசீஏ-7 |
| | டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி | | - | - | ஏசீஏ-3 |
| | | | 582,355,423 | 188,594,288 | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

